1

## அங்காளம்மன் ஒருகட்ட ஆசாரியை பிடித்த வரலாறு.

தாயனூர் ஏரி, மலையனூர் ஏரி பூங்காவனம் சோலையில் புத்தா வளர்ந்த சக்தி புத்துக் கண்ணின் மேல் பிரசண்டமாகி "ஆகா! நாம் அங்காளபரமேஸ்வரி இந்த தாயனூர் ஏரியில், மலையனூர் ஏரியில் வந்து பிறந்து, வளர்ந்து பூஜை பண்ணு வதற்கு பூமரா மாக, பூசாரியை பிடித்துக் கொண்டோம்! அடிமைக் குழந்தைகளையும் பிடித்துக் கொண்டோம்! ஆனால் நாம் இந்த வண்டாறிச்ச புத்து, செல்லாறிச்ச புத்தில் வெய்யிலும் கானலிலும் வெகுநாளாக குடியிருக்கிறோம். காத்திலும், மழையி லும் கானகத்திலே குடியிருக்கிறோம். ஆகையால், நம்மளுக்கு மண்டபம், மடப் பள்ளி மகாமண்டபம் வேண்டும்! கோபு மடப்பள்ளி, கோபுரங்களும் வேண்டும்! என்று உற்று நினைத்து ஒருகோடி சிந்தனையில், பார்த் து நினைத்து பலகோடி சிந்தனையில்

6

நாம் இந்தப் புத்துக் கண்ணிலே குடியி
ருந்தால் வெய்யல் அடிக்குது, காத்து,
மழை, மின்னல், இடியெல்லாம் இடிக்
கிறது, நாம் இந்தப் புத்துக் கண்ணிலே
குடியிருக்க நம்மளால் முடியாது! நம்ம
ளுக்கு குடியிருக்க கோயமடப்பள்ளி
மகா மண்டபம் வேணும்! ஆகையால்
யானையைப் பிடித்தால் நம்மளுக்கு வந்து
மண்டப மடப்பள்ளியெல்லாம் செய்வார்கள்.
என்று ஒத்தைக் கண் புத்தில் ஒதுங்கி வளர்
ந்து. அந்த வடதேசம் விட்டு, தென்
தேசத்தை பார்க்கும் போது, அந்த
நகவிணை பூமியிலே வில்வராசன் பட்டணம்.
நாம் போகிப் பட்டணம், ஆலத்தூர் பட்
டணம் என்ற பட்டணத்தில் வணங்காத வன்-
னியர்கள்! இணங்காத, ராஜாக்கள்! அந்த
வெள்ளையென்ற ஆசாரிமார் சிற்ப சாஸ்திரி
பத்துச் சுத்துக் கோட்டை பாம்பெரு
மண்டபம், எட்டுச் சுத்துக் கோட்டை
எரும்பு ஏரு மண்டபம். தாசில் வேலை
கிலெக்டர் வேலை செய்து வருகிறேன்

அந்த ஆசாரி வீட்டில் புருசனும் மனைவி
யும் குழந்தையில்லாமல் தவமாய் தவமிரு
ந்து மாணிக்கம் போல் ஒரு குழந்தை
பிறந்து செல்வமாக வளர்ந்து வரும்போது,
அங்காள பரமேஸ்வரி பார்த்து "அடடா!
இவனை பிடிச்சாத்தான் நம்மளுக்கு கோயக்
கட்டு வாங்க. அப்படியானால் இந்த ஆசாரி
யை எப்படி பிடிப்பது?" என்று நினைத்து, தனக்
கு ஆசை பண்ணும் ஆசாரியை கூப்பிட்டாள்.

ஆசாரி வந்து "என்னம்மா, தாயே!" என்று
கேட்டான்.

அங்காள பரமேஸ்வரியாகப்பட்டவள்
ஆசாரியை நோக்கி "அப்பா, ஆசாரி! அந்த
பிரம கபாலத்தை எடுத்து, அதில் சிறு
காட்டு கருமருந்தை போட்டுக்கிட்டு, உட
னே ஆவூந்தூர் பட்டணம் சென்று, தாசில்
வேலை கலைக்டர் வேலை செய்யும் வெள்ளை
யன் ஆசாரியிடம், அங்காள பரமேஸ்வரி
க்கு கோவில் மடப்பள்ளி கட்ட வேணு
மென்று, கூட்டி வா! என்றாள்.

அதற்கு பூசாரி "அம்மா, தாயே! வெள்ளையன் ஆசாரியின் பெருமையை என்னவென்று சொல்வேன்; அவர் தாசில் வேலை, கலெக்டர் வேலை செய்கிறார். அவரைப் போய் கூப்பிட்டால், கோவில் கட்ட வருவாராம்மா?" என்றான்.

மறுபடியும் பூசாரி சொன்னான், "அம்மா, தாயே! அவர் வீட்டில் ஏழு தலை வாசலில் ஏழுமந்திரி காவல் இருப்பார்கள்; அங்கு நான் போனால், என்னை உள்ளே விடுவார்களா? ஆகையால், அங்கு நான் போகமாட்டேன்" என்றான்.

அதற்கு அங்காள பரமேஷ்வரி "அப்பா, பூசாரி! பூமாலே! நீ, பயப்படவேண்டாம். நீ போய் ஆசாரி வீட்டின் முன் நின்றால், அங்கிருக்கும் மந்திரிகள், உன்னை யார் என்று கேட்டால், நான் அங்கம்மா பூசாரி யென்று சொல் உள்ளே விடுவார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட பூசாரி "சரி, நல்லது" என்று புறப்பட்டு ஆலத்தூர் பட்டணம் சென்று வெள்ளையன் ஆசாரி அரண்மனை முன் நின்றான்.

அரண்மனை முன் வாசலில் நின்ற மந்திரிகள் பூசாரியை நோக்கி "யாரப்பா நீ?" என்றார்கள்.

அதற்கு பூசாரி "அப்பா, மந்திரிகளே! நான் அங்காளபரமேஸ்வரியின் பூசாரி; இந்த வெள்ளையன் ஆசாரி அங்கம்மா கோவிலுக்கு சேர்ந்தவராவார், அவரை நான் பார்க்க வேண்டும்" என்றான்.

அதைக் கேட்ட மந்திரிகள் நல்லதென்று கேட்டுக் கதவை திறந்து விட்டார்கள். உடனே பூசாரி அரண்மனையின் உள்ளே சென்று, வெள்ளையன் ஆசாரியைக் கண்டு நமஸ்காரம் செய்தான்.

பூசாரியை பார்த்த வெள்ளையன் ஆசாரியார் பூசாரியை நோக்கி "அப்பா, பூசாரி! நீ எந்த ஊர்?" என்று கேட்டார்.

அதற்கு பூசாரி "அகோ, பாரும் சாமி! நான் தாயனூர் அங்காத்தா கோவில் பூசாரி" என்றான்.

அதற்கு வெள்ளையன் ஆசாரி "அப்பா, பூசாரி! இங்கு எதற்கு வந்தாய்? என்று கேட்டார்.

அதற்கு பூசாரியானவர் "சாமி! தாயனூர், மலையனூரில் இருக்கும் அங்காத்தா உங்களை கோயில்கட்ட சொல்லி வரச் சொன்னாள்!" என்றான்.

அதைக் கேட்ட வெள்ளையன் ஆசாரி "அட, பூசாரி! சுடுகாட்டுத் தெய்வத்துக்கா, தொழில் செய்ய வரச் சொன்னாய்? அந்த அங்காத்தாளை கொல்லன் கொறட்டால் பல்லை பிடுங்குவேன், வாச்சியுளி யெடுத்து வகையாக சீவிடுவேன்! நான் நாகில் வேலை, கலெக்டர்யில் இருப்பதை கொஞ்சங்கூட மதியாமல், பயமில்லாமல் சுடுகாட்டுத் தெய்வத்திற்கு கோவில் கட்ட வரும்படி சொன்னதா?" என்று வெள்ளையன் ஆசாரி யார் மந்திரிகளை கூப்பிட்டு அடே, மந்திரிகளே! இந்தப் பூசாரியை பிடித்துக் கட்டி காவலில் போடுங்கள்," என்றார்.

அதற்கு பூசாரி "அய்யோ, சாமி! அங்கம்மா சொல்லிவிட்டதை, நான் வந்து சொன்னேன்; என்னை ஒன்றும் செய்யாதீர்கள்" என்றார் பூசாரி.

அதற்கு வெள்ளையனாசாரியானவர் "அடே, பூசாரி! அங்கம்மா சொன்னால் என்ன, நீ இங்கு வரலாமா?" என்றார்.

அதற்கு, பூசாரி "அய்யா, சாமி! நான் வந்தது வந்து விட்டேன், என்னை அடிக்க வேண்டாம், உதைக்க வேண்டாம்! இந்த ஒரு தரமும் என்னை மன்னித்து விடுங்கள்" என்று கும்பிட்டான்.

இதைக்கேட்ட ஆசாரி மந்திரிகளை நோக்கி "அடே, மந்திரிகளே! இந்தப் பூசாரியை வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டு, கதவை சாத்தி பூட்டுங்கள்" என்றதும், மந்திரிகள், பூசாரியை வெளியே முடுக்கிவிட்டார்கள்.

அரண்மனையை விட்டு வெளியே வந்த பூசாரி, பயந்து, கை கால் நடுங்கி வேகமாக தாயனூர் வந்து, அங்காள பரமேஸ்வரியின் முன் நின்றான்.

பூசாரியைக்கண்ட அங்காள பரமேஸ்வரி "அப்பா, பூசாரி! ஆலத்தூர் பட்டணம் போய் ஆசாரியை, —

கூப்பிட்டாயா?" என்று கேட்டாள்.

அதற்கு, பூசாரியானவன் அங்காள பரமேஸ்வரியை நோக்கி "அம்மா, அங்கந்தாயே! நான் ஆலத்தூர் பட்டணம் சென்று வெள்ளையன் ஆசாரியானைக்-கூப்பிட்டேன்; அவருக்கு கோபம் வந்து, சுடுகாட்டுத் தெய்வத்திற்கு தொழில் செய்ய வரமாட்டேன் என்று சொன்னார்! கொல்லன் கொறடெடுத்து பல்லைப் பிடுங்கச் சொன்னார்! வாச்சியுளி யெடுத்து வகையாக வீசச் சொன்னார்!" என்றான்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அப்பா, பூசாரி! நீ மறுபடியும் வெள்ளையன் ஆசாரி வீட்டுக்குப் போய். நான் ஐந்து மந்திரம் தருகிறேன் அதைக் கொண்டுபோய் வாசல் படியில் ஒரு மந்திரத்தை வை! ஏழு கதவும் திறந்து கொள்ளும்; பிறகு ஒரு மந்திரத்தை மந்திரிகள் மேல் போடு. மந்திரிகள் உறங்கிப் போய் மீண்டும் கண்ணை முழிக்கா-மல் இருப்பார்கள். பிறகு, ஒரு மந்திரத்தை மாடாக் குழியில் வைத்து விடு; பிறகு, ஒரு மந்திரத்தை பொட்டக்காளியில்-

வைத்துவிடு" என்று, பூசாரியிடம் மந்திரத்தை கொடுத்து அனுப்பி வைத்தாள்.

பூசாரி மந்திரத்தை வாங்கிக் கொண்டு ஆலத்தூர் பட்டணம் சென்று, ஆசாரி வீட்டின் வாசற்படியில் ஒரு மந்திரத்தை வைத்தான். உடனே எழு கதவும் திறந்து கொண்டது, பிறகு ஒரு மந்திரத்தை மந்திரிகள் மேல் போட்டார். மந்திரிகள் மயக்கம் ஏற்பட்டு, முடின கண்ணை முழிக்காமல் இருந்தார்கள். உடனே பூசாரி வீட்டின் உள்ளே சென்று, மாடாக்குழியில் ஒரு மந்திரத்தை வைத்துவிட்டு, பொடக்காளியில் ஒரு மந்திரத்தை வைத்துவிட்டு, காயனார், மலையனார் புறப்பட்டார், பூசாரி.

அப்போது, அங்காள பரமேஸ்வரி பார்த்து, வெள்ளையன் ஆசாரியின் ஒரே ஆண் குழந்தைக்கு, வயிற்று வலி ஏற்படும்படி செய்து, விட்டாள்.

ஆலத்தூர் பட்டணம் வெள்ளையன் ஆசாரி குழந்தைக்கு வயிற்று வலி வந்து, பொறுக்க முடியாமல் கதறினான். ஆசாரி வந்து குழந்தையை எடுத்து தோளின் மேல்-

வைத்து அழுகையை அடக்கிப் பார்த்தார். குழந்தைக்கு அதிக வயிற்று வலி ஏற்பட்டு அதிகமாக அழுதான்.

குழந்தை அதிகமாக அழுவதைக் கண்ட ஆசாரி தாதிமார்களை கூப்பிட்டு "அடி தாதிமார்களே! மாடாக்குழியில் தீபம் இருக்கிறது, அதை எடுத்து பொருத்தி வையுங்கள்! என்றார். தாதிமார்கள் உடனே சென்று மாடாக்குழியில் தீபத்தை எடுக்கும் போது, மாடாக் குழியில், தேள் இருந்து அவளைக் கடித்து விட்டது. தேள்க்கடி பொறுக்க முடியாமல் தாதியானவள் அய்யோ, முறையோ வென்று அழுதாள்.

இதைக்கண்ட ஆசாரி மற்றொரு தாதியைக் கூப்பிட்டு, பொடக்காளியில் போய் விறகு எடுத்து வரும்படி சொன்னார். அப்படி விறகெடுக்கப் போனவளை விறகுப் பட்டறையில் காட்டேறி நாகன் இருந்து தாதியின் கண்ணைப் பிடுங்கி விட்டது. இப்படியாக வெள்ளையன் ஆசாரி வீட்டில் அலங்கோலமாக இருந்தது.

அப்போது ஆசாரியானவர் மிக்க விசனம் கொண்டு "அடே, மந்திரி! முந்தா நாள் அங்கம்மா ஆசாரி யென்று சொல்லி யாரோ ஒருவன் வந்தான். அவன் தாயனார் அங்கம்மாளுக்கு கோயில் கட்ட வரச் சொன்னானே? அந்த தாயனார் அங்கம்மா பண்ணப்பட்ட அழுங்கோலமாகத்தான் இருக்குமென்று விசனமடைந்திருக்கும் போது.

தாயனார் அங்காள பரமேஸ்வரி நாணற்பூப் போல் நரைத்த கிழவி, தும்பப்பூப் போல் துவண்ட கிழவி, கோடாங்கிக்காரி வடிவெடுத்து, ஆலத்தூர் பட்டணம் வந்து வெள்ளையன் ஆசாரி வீட்டு வீதியிலே குறி சொல்லிக் கொண்டு போகும் போது, வெள்ளையன் ஆசாரி கண்டு குறத்தியைக் கூப்பிட்டாள்.

ஆசாரி கூப்பிடுவதைக் கண்ட அங்காள பரமேஸ்வரி கல்லாடித் தடியூன்றி வந்து ஆசாரியின் முன்று "ஏப்பா, என்ன அழைத்தாய்?" என்று கேட்டாள்.

அதற்கு ஆசாரி "அம்மா, குறப்பெண்ணே!

எனக்கொரு குறிபார்த்துச் சொல்லம்மா? என் வீட்டில் திடீரென்று கஷ்ட மேற்பட்டது என்ன? இது யார் செய்த கோலமோ? எவர் செய்த கோலமோ? நன்றாகப் பார்த்துச் சொல்?" என்றார்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அப்பா, வெள்ளையன் ஆசாரி! நீ, அதிகாரக் காரன் உன் வீட்டுக்கு வந்த அவதிகளை சொல்கிறேன் கேள். வடக்கு வட தேசம் அங்காளம்மன் கோவில் ஆசாரி உன் வீட்டுக்கு வந்ததுண்டும், உன்னை கோவில் கட்ட கூப்பிட்டதுண்டும்! அதற்கு நீ, சுடுகாட்டுத் தெய்வத்திற்கு தொழில் செய்ய வரமாட்டேன் என்று சொன்னதுண்டும். கொல்லன் கொறட்டால் பல்லைப் பிடுங்கச் சொன்னதுண்டும். வாச்சியுளி யெடுத்து வகையாகச் சீவச் சொன்னதுண்டும்! இப்படியெல்லாம் நீ, அங்காள பரமேஸ்வரியை சொன்னதால், அவள் செய்த அழங்கோலமப்பா, இது." என்றாள்.

அதற்கு ஆசாரி "அம்மா, தாயே! உன்
னுடைய மகிமையிருந்தால், என் குழந்
தைக்கு வயிற்று வலி நல்லாக வேண்டும்!
தேள் கடித்த பெண்ணுக்கு நல்லாக
வேண்டும்! பாம்பு கடித்தவனுக்கு நல்லா
க வேண்டும்! என் வீட்டில் உள்ளவர்
கள் எப்போதும் போல் சேமமாக இருந்
தால், அங்கம்மா மகிமையால் சுகமாகி
விட்டால், உனக்கு பெருக்குடியாகிறோம்"
என்றார், ஆசாரி.

அதற்கு ஊரத்தியான அங்காள பரமேஸ்
வரி "அப்பா, ஆசாரி! என் மகிமையைப்
பார்!" என்று சிறுகாட்டுக் கருமருந்தள்ளி
ஆசாரியின் குழந்தை மேல் வீசினாள்.
குழந்தைக்கு உடனே வயிற்று வலி
நின்று விட்டது, தேள் கடித்தவளுக்
கும் நல்லா ஆகிவிட்டது, பாம்பு கடித்
தவனுக்கும் நல்லாகிவிட்டது. ஆசாரி
யின் வீட்டில் எப்போதும் போல் சுகமாக
இருந்தார்கள்.

அப்போது வெள்ளையன் ஆசாரி.

இந்த அருகாட்டுத் தெய்வம் நம்மகிட்ட வந்து சொந்தம் கொண்டாடுகிறது; இதை, மலையாள மந்திர காரனை கூப்பிட்டு கட்டித்தள்ள வேண்டுமென்று மந்திரிகளை கூப்பிட்டு "அடே, மந்திரிகளே! மலையாள மந்திர காரனைக் கூப்பிட்டு, அந்த அருகாட்டுத் தெய்வத்தை கட்டித்தள்ளுங்கள்!" என்றார்.

இதைக் கேட்ட அங்காள பரமேஸ்வரி ஏது இந்த வெள்ளையன் ஆசாரிக்கு இன்னும் கர்வம் அடங்கவில்லை யென்று கோபமுண்டாகி அகோர வீரபுத்திரனைக் கூப்பிட்டு, மலையாள மந்திர காரனை ஆகாயத்தில் அந்தரமாய் நிறுத்திவிடு! என்று சொன்னாள். அகோர வீர புத்திரனும் ஈஸ்வரி சொன்னபடி செய்தார்.

வெள்ளையன் ஆசாரி இதையெல்லாம் பார்த்து பயந்து, இந்தத் தெய்வத்தை நாம் கட்டுப்படுத்த முடியாது என்று வீட்டுச் ஜனங்களை யெல்லாம் கூட்டிக் கொண்டு, தாயனார், மலையனார் சென்று, அங்காள பரமேஸ்-

வரிக்கு, அஸ்டகிரி, கெம்பகிரி, மகாமண்டபம் எல்லாம் கட்டி கோபுர வேலை முடித்து, மூன்று வகைப் பொங்கல் வைத்து, பூஜைகள் செய்து, ஈஸ்வரியை வணங்கி நின்றார்கள்.

அப்போது அங்காள பரமேஷ்வரி, ஆசாரியை நோக்கி "அய்யா, ஆசாரி! உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தால், அங்கமுத்து! என்று பெயர் வைக்கவேணும். பெண் குழந்தை பிறந்தால் அங்கம்மாள்! என்று, பெயர் வைக்கவேண்டும்! முதல் முடி என் கோவிலில் வந்து எடுக்கவேண்டும்! பிள்ளைப் பொங்கல் வைக்கவேண்டும்! நீயும், உன் குலத்தாரும் நீடூழி காலத்திற்கு என்னை மறக்காமல் எனக்கு பிள்ளைக் குடியாக வேண்டும்! சாமியில்லை, பூதமில்லையென்று நினைக்க வேண்டாம்! அங்கம்மா! என்று கூப்பிட்டால் ஆபத்துக்கு வருவேன்! ஆயா! என்று கூப்பிட்டால், அச்சிணமே வருவேன்! என் கோவில் வளர்ந்தது போல், உன் குடிகள் வளரட்டும்!" என்று வாழ்த்தினாள், ஈஸ்வரி.

வெள்ளையன் ஆசாரி மனம் குளிர்ந்து வணங்கி, விடை பெற்று, ஆலத்தூர் பட்டணம் சென்று சுகமாக, இருந்தார்கள்.